கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டுவரும் கொளத்தூர் ஏரிக்கரையின் இறுதிக்கட்ட பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (06.11.2025) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ – இ.கருணாநிதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

தாம்பரம் கிழக்குப் பகுதி - செம்பாக்கம் தெற்கு பகுதிக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர்கள் ஆ.நடராஜன் – இரா.சுரேஷ் அறிக்கை!

தாம்பரம், நவ. 07 -

தாம்பரம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் மற்றும் செம்பாக்கம் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் செம்பாக்கம் இரா.சுரேஷ் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் கிழக்குப் பகுதி மற்றும் செம்பாக்கம் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (07.11.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 4 மணியளவில், மாடம்பாக்கம், மெயின் ரோடு, சுதர்சன் நகரில் உள்ள வெங்கடேஸ்வரா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர் பரிதி இளம் சுருதி எம்.சி, மண்டலக் குழுத் தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், பம்மல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் த.ஜெயக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆதிமாறன், மாநில தகவல் தொழில் நுட்ப துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன் ஆகியோர் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பூத் பொறுப்பாளர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA2, BLC, BDA, சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர்கள் மாடம்பாக்கம் ஆ.நடராஜன், செம்பாக்கம் இரா.சுரேஷ் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தி. மு. கழகத்தின் துணை பொதுச் செயலாளராக பொறுப்பெற்றிருக்கும் அமைச்சர் மு. பெ. சுவாமிநாதனுக்கு, திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக பொறுப்பெற்றிருக்கும் திருப்பூர் மாநகராட்சியின் நான்காம் மண்டல குழுத் தலைவர் இல. பத்மநாபனுக்கு, மனித வளமேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி. கயல்விழி செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ பிரகாஷ் ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்தனர். உடன் கழக நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

வேலூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட

காட்பாடி - கே.வி.குப்பம் தொகுதிகளுக்கான பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிவிப்பு!

வேலூர், நவ.7-

வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இன்று (07.11.2025 வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணிக்கு துர்கா மஹால், வடுங்குட்டை. வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எனது தலைமையில் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் இந்திய கூட்டணி அமோக வெற்றி பெற்று மீண்டும் கழக தலைவர் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு அமைய "என்வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற முன்னெடுப்போடு வேலூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட காட்பாடி, கே.வி.குப்பம் சட்டமன்ற தொகுதிகளில் உள்ள கழக பாக முகவர்கள் (BLA2), ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கழக வடக்கு மண்டல பொறுப்பாளரும், திருவண்ணாமலை மாவட்ட கழக செயலாளர், பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், தொகுதி வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணி தொகுதி OTN ஒருங்கிணைப்பாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், பாக முகவர்கள் (BLA2), அனைவரும் குறித்த நேரத்தில் தவறாமல் கலந்துக்கொண்டு சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

பொருள்:

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR)

கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

மிசா.கு.பாலகிருஷ்ணன் சகோதரி தனலட்சுமி அம்மையார் நினைவேந்தல்!

திருவாரூர், நவ .7 -

மகாதேவபட்டணம் நினைவில் வாழும் நல்லாசிரியர் ஜெ.நடராஜன் அவர்களுடைய மனைவியும்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மிசா.கு.பா.என்கிற கு. பாலகிருஷ்ணன் அவர்களுடைய அன்பு சகோதரியும், திருமதி. இளவரசி ராஜ்குமார், திருமதி. மணிமேகலை சேகர், திரு என்.ராஜசேகர்,மகாதேவப்பட்டணம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும், முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினருமான. எம்.என் பாரதிமோகன்,கும்பகோணம் பரஸ் பர வங்கி மேலாளர் ஜெ.என்.சுகுமாரன், மன்னார்குடி நகர கூட்டுறவு வீட்டு வசதி வீட்டு வசதி சங்க அலுவலர் செ.என்.ராஜசோழன் ஆகியோரின் அன்பு தாயாருமான, திருமதி தனலட்சுமி நடராஜன் அவர்கள் இயற்கை எழுதியதை முன்னிட்டு 03 .11.2025 அன்று மாலை 6:30 மணிஅளவில் அம்மையாரின் திருவுருவப் படத்தை கழக சட்ட திருத்தக் குழு தலைவர் மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்ச்சி முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் பி.ராசமாணிக்கம் தலைமையிலும், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வி.செல்வராஜ்,மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, வலங்கைமான்ஒன்றிய கழக செயலாளர் வீ.அன்பரசன், தலைமை செயற்குழு உறுப்பினர் சு.ஞானசேகரன், மாவட்ட கழக அவைத் தலைவர் க.தன்ராஜ், மாநில மாணவரணி து. அமைப்பாளர் மன்னை த.சோழராஜன், மாவட்ட திராவிட கழக தலைவர் ஆர்.பி.சித்தார்த்தன், ஒன்றிய கழக செயலாளர்கள் கோட்டூர் வீ.எஸ்.ஆர். தேவதாஸ், டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேரி பி.சிவா, ந.கவியரசு ,மதுக்கூர் ஆர்.இளங்கோ, ஐ.வி. குமரேசன், நகர கழக செயலாளர்கள் வீரா. கணேசன்,ஆர்.எஸ். பாண்டியன் தொகுதி பார்வையாளர் ராஜா சீனிவாசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அரிச்சந்திரபுரம் த.செல்வம், பேரூராட்சி தலைவர் ஆர்.ஆர். ராமராஜன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை பைங்காநாடு க.மலர்வேந்தன் தொகுத்து வழங்கினார். முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் நன்னிலம் வரத கோ. ஆனந்த்,கழக பொதுக் குழு உறுப்பினர்கள் மு.ருசு வேல்ட், ராஜ. பூபாலன், கலைவாணி மோகன், தெ.காஞ்சிதுரை, மாவட்டம் மகளிர் அணி தலைவர் ராணி சேகர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சோபா கணேசன்,மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வீரா.தேசபந்து, மு. பொதுக் குழு உறுப்பினர் வ.முத்துராமகிருஷ்ணன்,

திருவாரூர் எஸ்.என். அசோகன் மற்றும் மாற்று கட்சி தோழர்கள்,கழக சார்பு அணி நிர்வாகிகள் ஒன்றிய, நகர, கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்துகொண்டனர்.

'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி'

திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பு அணிகளின் ஆலோசனை கூட்டம்!

யு.எஸ்.குறளரசன், ஏ.இந்துமதி முன்னிலை! வை.ம.அருள்தாசன் ஆலோசனை வழங்கினார்!

சென்னை,நவ.7-

சென்னை வடகிழக்கு மாவட்டம்திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் வழக்கறிஞர்கள்- பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் - மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் 3-11-25 அன்று மாலை பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கழக துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் ஆ.ராசா எம்.பி, அறிவுறுத்தலின் பெயரில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம். எல்.ஏ வழிகாட்டுதலில் மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவரும் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான தி.நகர் எஸ்.மோகன் மேற்பார்வையில் திருவொற்றியூர் மேற்கு பகுதிக்குட்பட்ட வழக்கறிஞர்கள் - மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள்- பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை. ம. அருள்தாசன் தலைமையேற்று பாசிச பாஜக மக்கள் விரோத அரசு கொண்டு வந்துள்ள (SIR) சிறப்பு சீர்திருத்த வாக்காளர் பட்டியல் குறித்தும் தலைமை கழகத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நாட்களில் நாம் பணியாற்றும் முறைகள் குறித்தும் , இந்த பணியில் வட்டக் கழக செயலாளர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் , வட்ட செயலாளர்களின் ஆலோசனைகளைப் பெற்று அந்தந்த வட்டத்திற்குட்பட்ட BLA 2 , BDA, BYA க்களுக்கு எவ்வாறு உறுதுணையாக இருக்க வேண்டும் ஆலோசனைகள் வழங்கினார்.

பகுதி கழக நிர்வாகிகள் யு.எஸ். குறளரசன், ஏ. இந்துமதி ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர். நவக்குமார் வழக்கறிஞர் அணி மாவட்ட துணைத் தலைவர் திருமதி. ஷோபனா சுரேஷ்,

விளையாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன் மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் தழவை எஸ்.ரஞ்சித், டி.சக்கரவர்த்தி, மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் லிவிங்ஸ்டன் ராஜ்குமார்,

ஓட்டுனர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் டி.கர்ணன் தொகுதி ஒருங்கிணைப்பாளர் தகவல் தொழில்நுட்ப அணி எஸ். ராஜேஷ், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் / துணை அமைப்பாளர்கள் மு.பாபு, ஆர்.நரேன்குமார், ஸ்ரீ சரவணன், கே. சரவணன், எச். ரியாசுதீன் எம். ராமு, கே. கோகுல், எஸ். சேதுபதி, அரவிந்தன், இ. பூங்கொடி, சாமுண்டீஸ்வரி, பாலாஜி, டி.ஞானசேகர், ஆர். எஸ். யுவராஜ், ஜி. வெற்றிச்செல்வன்,

ஜெ. மாரிமுத்து, எஸ். சதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு. தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - செ.சண்முகசுந்தரம், 19, வடக்கு வீதி, காந்திபுரம், நம்பியூர்.

துணைத் தலைவர் - பி.கே.காளியப்பன், சீதாலட்சுமி, கோபி.

அமைப்பாளர் - கே.எஸ்.சங்கர்சிவகுமார், சங்கரன் தோட்டம், கா.கணபதிபாளையம், அளுக்குளி, கோபி.

துணை அமைப்பாளர்கள் - 1) ப.பூபாலன், கே.ஜி.திருமண மண்டபம், புளியம்பட்டி, சத்தி. 2) எஸ்.ரமேஷ்செல்வன், குருமந்தூர் மேடு, நம்பியூர். 3) எம்.சதாசிவம், 26-பி, பிள்ளையார் கோவில் தெரு, சத்தி.

4) கு.ப.முருகசாமி, 188/21 புளியம்பட்டி ரோடு, நம்பியூர். 5) என்.டி.மகேந்திரன், 21/1, காந்திபுரம், ல.கள்ளிப்பட்டி, கோபி. 6) என்.காமராஜ், 166/7, கருப்பணன் வீதி, பதிபாளையம், சிறுவலூர், கோபி.

விருதுநகர் வடக்கு மாவட்டம்

சிவகாசி மாநகரம்

தலைவர் - ஆர். செல்வம் 467, முத்து மாரியம்மன் காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

துணைத் தலைவர் - க. அரவிந்த் 1479, பி.கே.என். ரோடு, சோலை காலனி, சிவகாசி கிழக்கு - 626189, விருதுநகர் மாவட்டம்.

அமைப்பாளர் - இரா. அழகு முத்துமாரியம்மன் காலனி, பள்ளபட்டி ரோடு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பெ. பாரதி 32, மேலரத வீதி, சிவகாசி - 626123, விருதுநகர் மாவட்டம். 2) ஜோ. ஆசிர்வாதம் 486, பாரதி நகர் 4வது தெரு, சிவகாசி கிழக்கு - 626189, விருதுநகர் மாவட்டம். 3) பி. சுப்பிரமணியன் 147ஏ, அம்மன் கோவில்பட்டி நடுத் தெரு, சிவகாசி கிழக்கு - 626189, விருதுநகர் மாவட்டம். 4) இரா. பாலாஜி சி-69, ஆலாவூரணி, அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம். 5) எம். செல்வம் 108, ஆலாவூரணி, அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

திருப்பூர் மத்திய மாவட்டம்

திருப்பூர் தெற்கு மாநகரம்

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக பணியாற்றி வந்த ரஜினி செந்தில் அவர்கள் திருப்பூர் மத்திய மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால் அவருக்கு பதிலாக **க. சுரேஷ்** (3, தென்னம்பாளையம் கிழக்கு, வெள்ளியங்காடு 2வது வீதி, திருப்பூர் - 641604) அவர்கள் திருப்பூர் தெற்கு மாநகர கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 06-11-2025.

வாகை சந்திரசேகர்
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

சென்னை வடக்கு மாவட்ட

பிரதிநிதி எஸ்.சொக்கலிங்கம் மறைவு! கழகத்தினர் அஞ்சலி!

சென்னை நவ:7

சென்னை வடக்கு மாவட்டம், ஆர். கே.நகர் மேற்கு பகுதி, முன்னாள் வட்ட கழக செயலாளரும், முன்னாள் பகுதி பொருளாளர், மாவட்ட பிரதிநிதிமான எஸ்.சொக்கலிங்கம் அவர்கள் மறைவெய் தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர். கே. நகர் மேற்கு பகுதி 38அவட்டத்தை சார்ந்த முன்னாள் வட்ட கழக செயலாளரும், முன்னாள் பகுதி பொருளாளரும், மாவட்ட பிரதிநிதியுமான எஸ். சொக்கலிங்கம் அவர்கள் உடல்நலக் குறைவால் நேற்று 6-11-2025 மாலை 5 மணியளவில் காலமானார்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கழகத்தினர் அவரது உடலுக்கு மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் எண்31, 2வது தெரு, கலைஞர் கருணாநிதி நகர், தண்டையார்பேட்டை, சென்னை 600081 என்ற இல்லத்தில் இருந்தது இன்று 7.11.2025 மாலை 4.00 மணியளவில் காசிமேடு மாயானத்தில் அடக்கம் செய்யப்படும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

முன்னாள் தலைமை கழகக் பேச்சாளரும் மாநில முன்னாள் மகளிரணி செயலாளர் மறைந்த வண்ணை தேவகி அவர்களின் 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி கூட்டம் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்எல்ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மற்றும் என்.ஹனிபா ஆர்.டி.ராஜா, மு.வேதலட்சுமி, கே.பி. சதீஷ்குமார், நேதாஜி கணேசன், பவித்ரா நரேஷ் குமார், வேளாங்கண்ணி, பொ.து.ராஜா, நாகராஜ், மருது கணேஷ், சத்யநாராயணன், சோம. சுந்தரமூர்த்தி, ஏ.டி.மணி, ஜெகன், விந்தன்,சரத், ம.பொ.சிவா, சம்பத்,ரகு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

முனைவர் மா. நன்னன்

நவம்பர் 7 (2017)



தந்தை பெரியார், புரட்சிக் கவிஞர் பாவேந்தர், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பேராசிரியர் அன்பழகனார் ஆகியோரோடு நட்புக் கொண்டு, பகுத்தறிவுக் கொள்கைப் பாதையில் தொடர்ந்து பயணித்தவர்.

தொடக்கப்பள்ளி முதல் படிப்படியாக உழைப்பால் உயர்ந்து, கல்லூரிப் பேராசிரியர், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் எனப் பணியாற்றி பல பெருமைகளைப் பெற்றவர்.

திராவிட இயக்கம், சுயமரியாதை, தன்மானம், பகுத்தறிவு, தமிழ் மொழி ஆகியவற்றில் பற்றுக்கொண்டு வாழ்ந்தவர். இளைஞர்களுக்கு திராவிட இயக்க உணர்வுகளை ஊட்டி தமிழ்த் தொண்டு ஆற்றி வந்தவர். கழகத்தின் தொடக்க காலத்திலிருந்தே உறுப்பினராக இருந்தவர். கழக தலைமை இலக்கிய அணியில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது, கழக இளைஞர் அணி சார்பில் தமிழகம் முழுவதும் நடைபெற்ற ஒவ்வொரு "பயிற்சி பாசறை" வகுப்புகளில் பங்கேற்று சமூகநீதி, திராவிட இயக்கம், சுயமரியாதை பற்றி கழக இளைஞர் அணியினருக்கு விளக்கியவர்.

1991–ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் "பெரியார் விருது" பெற்றவர். அத்துடன் இவரது தமிழ்ப் பணிக்காக "தமிழ்ச் செம்மல் விருது", "திரு.வி.க. விருது" ஆகிய விருதுகளை பெற்றவர்.

தம் வாழ்நாளில் பெரும் பகுதியை தமிழ்மொழி கற்பித்தல், வளர்த்தல், பிழை திருத்தல், செம்மைப் படுத்துதல் என்ற முறையில் பணியாற்றி, பகுத்தறிவு நெறி தழுவி வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.